2010 மே 6]

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை, 7-5-2010 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 7-5-2010 (வெள்ளிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (7-5-2010) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-5-2010) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

146. மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

147. காலநடை பராமரிப்பு (காலநடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2010-2011*. (தமிழ்)

148. மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2010-2011*. (தமிழ்)

149. பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2010-2011*. (தமிழ்)

150. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011*. (தமிழ்)

151. மனுக்கள் குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கை. *(2009-2010)*

152. மனுக்கள் குழுவின் எண்பத்திரண்டாவது அறிக்கை. *(2009-2010)*

153. மனுக்கள் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை. *(2009-2010)*

154. மனுக்கள் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை. *(2009-2010)*

155. மனுக்கள் குழுவின் எண்பத்தைந்தாவது அறிக்கை. *(2009-2010)*

156. மனுக்கள் குழுவின் எண்பத்தாறாவது அறிக்கை. *(2009-2010)*

***